


தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி






# ஆண்டுக்கு ரூ.360 கோடி செலவு, பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்வு: முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை 20, ஆகஸ்ட் 2026: பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயத்தி இன்று முதலமைச்சர் விஜய் சட்டசபையில் அறிவித்தார்.

முதலமைச்சர் ஜோசப் விஜய் இன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி எண் 110-ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:

உலகில் தான் உற்பத்தி செய்யும் பாலைத் தனது சந்ததிகளுக்கு மட்டுமின்றி, மனிதர்கள் உள்ளிட்ட பிற ஜீவராசிகளுக்கும் வழங்கி உயிரைக் காக்கும் பசுவைத் தெய்வமாகப் போற்றி வளர்த்து வருவது நமது பாரம்பரியத்தின் சிறப்பு.

இன்றைய அறிவியல் உலகில், ஒரு லிட்டர் பாலை உற்பத்தி செய்வதற்காகப் பசுவின் உடலில் சுமார் 500 லிட்டர் ரத்தம் சுத்திகரிக்கப்படுவதாகக் கூறப்படும்போது, பசுவின் உழைப்பை எண்ணி வியக்கத் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் 8 ஆயிரத்து, 800 பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 3 லட்சத்து, 16 ஆயிரம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து தினசரி 34 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு ஆவின் நிறுவனத்தின் மூலம் நாளொன்றுக்கு 31 லட்சம் லிட்டர் பால் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தி.மு.க. மெத்தனம்

தற்போது 4.3 சதவீதம் கொழுப்புச் சத்து மற்றும் 8.2 சதவீதம் இதரச்சத்துக்கள் அடங்கிய ஒரு லிட்டர் பாலுக்கு கொள்முதல் விலையாக 35 ரூபாயும், மாநில ஊக்கத்தொகையாக ஒரு லிட்டர் பாலுக்கு 3 ரூபாயும், ஆக மொத்தம் ஒரு லிட்டருக்கு கொள்முதல் விலை 38 ரூபாய் 5.11.2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அதிகாலை 3 மணிக்கே எழுந்து மாடுகளை சுத்தம் செய்து, பால் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் உழைப்பையும், தீவனம் மற்றும் வேலையாட்களின் கூலி உள்ளிட்ட அதிகரித்து வரும் செலவுகளையும் கடந்த கால அரசு போதிய




அளவில் கருத்தில் கொள்ளவில்லை.

உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் கூட இல்லாமல் இருந்துள்ளது. கடந்த காலத்தில் கொள்முதல் விலை உரிய அளவில் உயர்த்தப்படாத நிலையில், நம் அரசு சந்தித்து வரும் அதிகப்படியான நிதி நெருக்கடியிலும் பால் உற்பத்தியாளர்களின் நலனையும் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு, அவர்களின் உன்னதமான உழைப்பிற்கு உரிய மதிப்பை வழங்கும் வகையில் கொள்முதல் விலையை உயர்த்துவது நமது அரசின் கடமையாகும்.

லிட்டருக்கு ரூ.3 உயர்வு

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் 3 லட்சத்து 16 ஆயிரத்திற்கு மேலான பால் உற்பத்தியாளர்கள் பயன் அடையும் வகையில், பால்கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக 1 ரூபாய் உயர்த்தவும், மேலும், அரசு ஊக்கத் தொகை 3 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக உயர்த்தவும், ஆக மொத்தம் ஒரு லிட்டர் கொள்முதல் விலை 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த கொள்முதல் விலை உயர்வால் கூடுதலாக ஒரு மாதத்திற்கு ரூபாய் 30 கோடியும், ஒரு ஆண்டிற்கு 360 கோடியும் செலவாகும்.

இவ்வாறு முதலமைச்சர் கூறியுள்ளார்.

# தேர்தல் மோசடிகளை தடுக்க இந்திய வாக்காளர் அட்டையை உதாரணம் கூறிய அதிபர் டிரம்ப்: அமெரிக்கர்களிடம் வலியுறுத்தல்

சென்னை, 20 ஆகஸ்ட் 2026: அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது ட்ருத் சமூக ஊடக பதிவில், “இந்த மாத தொடக்கத்தில், இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் எங்கள் நிர்வாகத்திடம் ‘புகைப்பட அடையாள அட்டை இல்லாமல் அமெரிக்காவில் எப்படி தேர்தல்களை நடத்த முடியும்?’ என கேட்டுள்ளார். இந்தியாவில் கடைசியாக நடந்த தேர்தலில் 64.60 கோடி வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். அதில் ஒரு சதவீதத்திற்கும் குறைவானர்களே தபால் மூலம் வாக்களித்தனர். ஒவ்வொரு வரிடமும் புகைப்படத்துடன் கூடிய அடையாள ஆவணம் இருந்தது.

நாமும் சேவ் அமெரிக்கா சட்டத்தை இப்போதே நிறைவேற்ற வேண்டும்’’ என வலியுறுத்தி உள்ளார். சமீபத்தில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோரை, தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் சந்தித்த போது புகைப்பட அடையாள அட்டை குறித்து அவர் கேள்வி எழுப்பியது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் தேர்தல் மோசடிகளை தடுப்பதற்காக அமெரிக்க வாக்காளர்கள் அனைவரும் கட்டாயம் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டுமென சேவ் (அமெரிக்க வாக்காளர்களின் தகுதியை பாதுகாக்கும்) அமெரிக்கா சட்டம் வலியுறுத்துகிறது.

ஆனால் இந்த சட்டத்திற்கு ஜனநாயக மற்றும் குடியரசு கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதனால் இம்மாத தொடக்கத்தில் இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கான எந்த உறுதியான நடவடிக்கைகளும் இல்லாமல், அமெரிக்க செனட் சபை 5 வார கால விடுமுறைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. இதற்கிடையே 100 கோடிக்கும் அதிகமான இந்தியர்களிடம் வாக்காளர் அடையாள அட்டை இருப்பதாக இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தயவு செஞ்சு நீங்களே அவரை வைச்சுக்குங்க: காங். கிண்டல்

இந்திய தேர்தல் முறையை அமெரிக்க அதிபர் டிரம்ப் பாராட்டியது குறித்து காங்கிரஸ் கட்சியின் ஊடகம் மற்றும் விளம்பர பிரிவு தலைவர் பவன் கேரா தனது எக்ஸ் பதிவில்,



‘‘அன்புள்ள டொனால்ட் டிரம்ப் அவர்களே, தயவு செய்து ஞானேஷ் குமாரை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லுங்கள். அவரையே அங்கேயே வைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்ததாகக் கிடைக்கும் விமானத்தில் எங்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும் நாங்கள் அனுப்பி வைக்கிறோம். நீங்கள் எங்கள் மீது வீசிய அவமானங்கள் மற்றும் மிரட்டல்களுக்கு பதிலாக, நாங்கள் உங்களுக்கு செய்யக்கூடிய மிகச் சிறிய விஷயம் இது தான். இந்தியாவிலிருந்து அன்புடன்’’ என கூறி உள்ளார்.

# அமெரிக்கா - ஜம்மு காஷ்மீருக்கும் இடையிலான உறவு ஆழமடையும்..! உமர் அப்துல்லா நம்பிக்கை

சென்னை 20, ஆகஸ்ட் 2026: ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவை, இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் செர்ஜியோ கோர் இன்று சந்தித்து பேசினார். இந்த சந்திப்பிற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய செர்ஜியோ கோர், இது இந்தியாவின் ஒரு முக்கியமான பகுதி. நான் இங்கு முதல் முறையாக வருகை தந்துள்ளேன்.

இது நம்பமுடியாத அளவிற்கு அழகான இடம். இங்கு இருப்பதிலும், இந்த இடத்தைப் பார்ப்பதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்துள்ளேன். ஜம்மு முதல்வருடன் மிகச் சிறந்தொரு சந்திப்பை நடத்தியுள்ளேன். சில தொடர் நடவடிக்கைகள் குறித்து விவாதித்



தோம்; அவை பற்றி வாஷிங்டன் மற்றும் டெல்லிக்குக் கொண்டு செல்ல உள்ளோம். இது மிகவும் அன்பான மற்றும் சுமூகமான சந்திப்பாக அமைந்தது; இந்த உறவை மேலும் வலுப்படுத்த நாங்கள் ஆவலாக இருக்கிறேன் என்றார்.

இதனை தொடர்ந்து பேசிய ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, செர்ஜியோ கோருடனான சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்தும், குறிப்பாக ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்கா என்ன பங்களிப்பை வழங்க முடியும் என்பது குறித்தும் விவாதித்தோம். மேலும் படிப்படியாக தீர்க்கப்பட வேண்டிய சில நீண்ட காலப் பிரச்சினைகள் உள்ளன. எனினும் இந்த உரையாடலைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நாங்கள் ஆர்வமாக உள்ளோம். இந்த உரையாடல் ஒருபுறம் தூதர் கோர் மற்றும் வாஷிங்டன் நிர்வாகத்திற்கு இடையிலும், மறுபுறம் எனக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையிலும் நடைபெறும். எனினும் வரும் ஆண்டுகளில் அமெரிக்கா மற்றும் ஜம்மு-காஷ்மீருக்கும் இடையிலான உறவு மேலும் ஆழமடையும் என மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

# அனைத்து எம்எல்ஏ-க்களுக்கும் அரசு சார்பில் வாகனம் மற்றும் உதவியாளர்.! முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை 20, ஆகஸ்ட் 2026: சட்டப் பேரவையில் 110 வித்தின் கீழ் முதல்வர் விஜய் இன்று பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அந்த வகையில் கூட்டுறவு சங்கங்களில் ஆவின் பால் கொள்முதல் விலை ரூ.3 உயர்த்தப் படும் என பேரவையில் 110 விதியின் கீழ் முதலமைச்சர் விஜய் அறிவித்தார்.

இதன் மூலம் தற்போது உள்ள விலையான ரூ.38-ல் இருந்து ரூ.41-ஆக உயர்கிறது. தொடர்ந்து அறிவிப்புகளை வெளியிட்ட முதல்வர் பெரம்பூரில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும். பெரம்பூரில் ரூ.300 கோடியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்றார். முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தப்படும்.

மாநிலத்தில் 7 புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப் படும். ரூ.677 கோடியில் முதலமைச்சரின் புற்று நோய் பராமரிப்பு இயக்கம் உருவாக்கப்படும். மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் மண்டல புற்றுநோய் மையம் தொடங்கப் படும். அரசு மருத்துவக் கல்லூரிகளில் ரூ.351 கோடியில் கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்கள் உருவாக்கப் படும் என்றும் முதல்வர் அறிவித்துள்ளார்.

தொகுதி சார்ந்த ஆய்வு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக அனைத்து எம்எல்ஏ-க்களுக்கும் அரசு சார்பில் வாகனம் வழங்கப்படும்.




இதற்காக மாதம் தோறும் 75 ஆயிரம் ரூபாய் வாகன படியாக வழங்கப்படும். மேலும் பேசிய முதல்வர் விஜய், எம்எல்ஏ-க்கள் உதவியாளர் ஒருவரை நியமித்து கொள்ளலாம்; இதற்கு அரசு சார்பில் ரூ.25 ஆயிரம் வழங்கப் படும் என்றும் அறிவித்து உள்ளார்.



## ரியல் எஸ்டேட் துறையில் புதிய புரட்சி தமிழகத்தில் முதல் முறையாக 10 மாவட்டங்களில் 10 நாளில் 10 திட்டங்கள்: சமிரா குரூப் நிறுவனம் அறிமுகம்

சென்னை, 20 ஆகஸ்ட் 2026: சென்னையைச் சேர்ந்த சமிரா குரூப் நிறுவனம், "10 மாவட்டங்களில் 10 நாளில் 10 திட்டங்கள்" என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. தமிழக ரியல் எஸ்டேட் துறையில் இப்படி ஒரு பிரமாண்ட முயற்சி மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறையாகும். இந்த 10 புதிய குடியிருப்புத் திட்டங்களை, ஆகஸ்ட் 23 முதல் செப்டம்பர் 1 வரையிலான காலகட்டத்தில் தமிழகம் முழுவதும் இந்நிறுவனம் அறிமுகப்படுத்த உள்ளது. இதில் காலி மனைகள் மற்றும் தனி வீடுகள் ஆகியவை அடங்கும். ரூ.300 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் மூலம், தமிழகத்தில் வேகமாக வளர்ந்து வரும் முக்கிய நகரங்களில் சமிரா குரூப் நிறுவனம் தனது வணிகத்தை விரிவு படுத்துகிறது.

இந்த புதிய திட்டங்கள் திருச்சி, மதுரை, திருநெல்வேலி, வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், சென்னை, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 10 மாவட்டங்களில் வாசுகி நகர், சமிரா பெவிலியன், நியூ விஷன் டவுன்ஷிப் பி-9, சமிரா பிரைம் மற்றும் சமிரா புளோரன்சா பேஸ்-மி உள்ளிட்ட பெயர்களில் அமைய உள்ளன. ஒவ்வொரு திட்டமும் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில், ஏறக்குறைய 200 மனைகளைக் கொண்டதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. மனைகளின் அளவு சுமார் 800 சதுர அடியில் இருந்து தொடங்குகிறது.

இந்தக் குடியிருப்புத் திட்டங்களில் காலி மனைகள் மற்றும் வீடுகள் ஆகிய இரண்டும் இடம்பெறும். மேலும், பாதுகாப்பான சுற்றுச்சுவருடன் கூடிய நுழைவுவாயில்கள், பிரமாண்ட நுழைவு வளைவுகள், பூங்காக்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான பிற அடிப்படை வசதிகளும் இதில் இருக்கும்.

இது குறித்து சமிரா லேண்ட் அன்ட் டெவலப்மென்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஜெயக்குமார் முருகேசன் கூறுகையில், "10 நாளில் 10 மாவட்டங்களில் 10 திட்டங்களை அறிமுகப் படுத்துவது எங்கள் நிறுவனத்தின் மைல்கல் சாதனையாகும். சுமார் ரூ.300 கோடி முதலீட்டில், தமிழகம் முழுவதும் வேகமாக வளர்ந்து வரும் பல முக்கிய நகரங்களில்




எங்களின் இந்த புதிய திட்டங்கள் அமைய உள்ளன. இந்த முயற்சி, எங்களின் மாபெரும் லட்சியத்தையும், ரியல் எஸ்டேட் துறையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் கட்டமைத்துள்ள செயல்படும் திறனையும் காட்டுகிறது." என்று தெரிவித்தார்.

இது குறித்து சமிரா குரூப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எம். சந்தீப் குமார் கூறுகையில், "தமிழகத்தில் வளர்ந்து வரும் நகரங்களில், முறையான குடியிருப்புத் திட்டங்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதனைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே இந்த புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளன. இதில், பாதுகாப்பான சுற்றுச்சுவருடன் கூடிய வசதிகள், பூங்காக்கள் மற்றும் பிற அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டு மனைகள் மற்றும் தனி வீடுகள் ஆகியவை இடம்பெறும்.

வாடிக்கையாளர்களுக்குத் தரமான வாழ்க்கைச் சூழலையும், மிகச் சிறப்பாகத் திட்டமிடப்பட்ட குடியிருப்புகளை உருவாக்குவதே எங்களின் முக்கிய நோக்கமாகும்." என்று தெரிவித்தார்.

சமிரா குரூப் நிறுவனத்தின் அகில இந்திய செயல்பாடுகளின் தலைமை நிர்வாக அதிகாரி டி. செந்தில் வேலன் கூறுகையில், "இந்த 10-10-10 திட்டம், பல ஆண்டுகளாக எங்கள் நிறுவனம் தனக்கான வலுவான அடித்தளத்தை அமைத்துள்ள தமிழகத்தில் இருந்து தொடங்குகிறது. இனி வருங்காலங்களில், தமிழகத்தைத் தாண்டி இந்தியாவின் மற்ற நகரங்கள் மற்றும் மாநிலங்களிலும் நாங்கள் கால் பதிக்க திட்டமிட்டுள்ளோம். தமிழகத்தில் நாங்கள் பெற்ற அனுபவத்தையும், கட்டுமானத் திறன்களையும் இந்தியா முழுவதும் உள்ள புதிய இடங்களுக்குக் கொண்டு செல்வதே எங்களின் நோக்கமாகும்." என்று தெரிவித்தார்.

## சென்னை சாம்சங் தொழிற்சாலையில் குடும்ப தினம்: 8 ஆயிரத்துக்கும் ஊழியர்கள் குடும்பத்தினருடன் பங்கேற்பு

சென்னை 20, ஆகஸ்ட் 2026: தங்களின் ஊழியர்களை கவுரவிக்கும் விதமாக சென்னையில் உள்ள சாம்சங் தொழிற்சாலை, 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஒன்றிணைத்து குடும்ப தினத்தை சிறப்பாக கொண்டாடியது. இசை, விளையாட்டுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளால் இந்த நிகழ்ச்சி உற்சாகமாக மாறியது.

தங்கள் அன்புக்குரியவர்கள் வேலை பார்க்கும் இடத்தை குடும்பத்தினர் நேரில் பார்ப்பதற்கு இந்த கொண்டாட்டம் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. மேலும், ஊழியர்களின் உழைப்பிற்கும், அவர்களுக்கு குடும்பங்கள் அளிக்கும் ஆதரவிற்கும் இது ஒரு மிகப்பெரிய அங்கீகாரமாக இருந்தது.

இந்த ஒரு நாளில், சாம்சங் சென்னை ஆலை முழுவதும் புதிய உற்சாகம் காணப்பட்டது. ஊழியர்கள் தங்கள் கணவன்/மனைவி, குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் வந்திருந்தனர். அனைத்து வயதினருக்கும் ஏற்ற வகையில் பல நிகழ்ச்சிகள் ஆலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

குழந்தைகள் விளையாடுவதற்காக டாட்லர் ஜோன், பால் பிட், மேஸ் ரன்னர், ட்ராம்போலைன் போன்ற பல விளையாட்டுகள் இருந்தன. மேலும், முகமூடி செய்தல், முகத்தில் வண்ணம் தீட்டுதல் போன்ற நிகழ்ச்சிகளையும் குழந்தைகள் கண்டு மகிழ்ந்தனர். போம் பார்ட்டி, பபிள் ஷோ, 3டி ஷோ மற்றும் புகைப்படம் எடுக்கும் இடங்கள் கொண்டாட்டத்தை மேலும் சிறப்பாக்கின.

இசை, நடனம், நகைச்சுவை மற்றும் ஊழியர்களுக்கான பாராட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஊழியர்களின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு மற்றும் கலாச்சார விருதுகள், அதிர்ஷ்ட குலுக்கல் மற்றும் ஞியி இசை என இந்த நிகழ்ச்சி மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

தென் கொரியாவைச் சேர்ந்த சாம்சங் ஊழியர்கள் மேடையில் தமிழ் பாடல் பாடியது இந்த நிகழ்ச்சியின் முக்கிய சிறப்பம்சங்



களில் ஒன்றாக அமைந்தது. இது ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மத்தியில் பெரும் கரகோஷத்தையும் வரவேற்பையும் பெற்றது. சென்னை ஆலையின் முக்கிய தலைவர்களும் ஊழியர்களுடன் இணைந்து நடனமாடியது அனைவரிடையேயான நட்புறவை மேலும் வளர்த்தது.

இந்த நிகழ்ச்சி குறித்து தொழிற்சாலை ஊழியர் லோமாவதியின் கணவர் கூறுகையில், "எங்கள் குடும்பத்திற்கு இது ஒரு அற்புதமான அனுபவம். அனைவரும் ரசிப்பதற்கு ஏற்றவாறு பல நிகழ்ச்சிகள் இருந்தன. ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் ஒன்றாக இணைந்து ஒரே சாம்சங் குடும்பமாக கொண்டாடியதைப் பார்ப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது." ஆயிரக்கணக்கான மக்களுக்கான இந்த மாபெரும் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்ய, ஆலையின் பல்வேறு குழுக்கள் ஒன்றிணைந்து செயல்பட்டன. பதிவு செய்தல், போக்குவரத்து, உணவு, பாதுகாப்பு, நிகழ்ச்சிகள் மற்றும் பரிசுகள் வழங்குதல் என அனைத்தையும் அவர்கள் மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

தொழிற்சாலை ஊழியர் பிரசாந்த் கூறுகையில், "இது அனைத்தும் உங்கள் கடின உழைப்பிற்குக் கிடைத்த வெற்றி. எல்லாவற்றிற்கும் மேலாக, எங்களை எப்போதும் அன்புடன் ஆதரிக்கும் நமது குடும்பங்களுக்கு நன்றி. எனது மனமார்ந்த நன்றிகள்.

நமது ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினருமே நமது மிக முக்கியமான சொத்து. உங்கள் மகிழ்ச்சியே சாம்சங்கின் எதிர்காலம்," என்று அவர் கூறினார்.

## முதல்வர் கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்: அமைச்சர் ராஜ்மோகன் அறிவிப்பு

சென்னை 20, ஆகஸ்ட் 2026: முதல்வர் கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்: அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்துள்ளார். கலை பண்பாட்டு துறை, தொல்லியல் துறைகளில் புதிய அறிவிப்புகளை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார். அகழாய்வுக்கான நிதி ரூ.10 கோடியாக உயர்த்தப்படும். பூம்புகாரில் ஆழ்கடல் அகழாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும். தொல்பொருட்கள் மற்றும் மாதிரிகளை அறிவியல் பகுப்பாய்வு மேற்கொள்ள நவீன தொல்லியல் ஆய்வகம் ரூ.2 கோடி மதிப்பில் அமைக்கப்படும். தொல்லியல் கள ஆய்வு, அகழாய்வு மற்றும் ஆழ்கடல் அகழாய்வுக்கான நிதி ரூ.10 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. தமிழரின் கடல் வழி வணிகம், துறைமுகம் மற்றும் ஆற்றங்கரைப் பண்பாட்டினை வெளிக்கொணர ரூ.3 கோடியில் கள ஆய்வு செய்யபபட்டும். நாட்டுப்புற கலைஞர்களுக்கு கை கொடுக்க வேண்டியது நம் கடமை; முதலமைச்சர் கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் நாட்டுப்புற கலைஞர்கள் கலை நிகழ்ச்சி நடத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் தொடங்கிய அனைத்து பணிகளும் தொடர்ந்து நடை பெறும்; கூடுதல் நிதி இந்த ஆட்சியில் ஒதுக்கப்படும். முதல்வர் கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடத்தப் படும். கலை மரபு மாறாமல் மேம்படுத்த, ரூ.2 கோடியில் கலை ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.

நாட்டுப்புறக் கலைஞர்கள் இசைக்கருவி, ஆடை, அணிகலன் வாங்க ரூ.10,000 என்பது ரூ.20,000 ஆக உயர்த்தப்படும். நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதி உதவி மேலும் 1,500 பேருக்கு விரிவுபடுத்தப்படும் மதுரையில் தமிழர் நாகரிக அருங்காட்சியகம் அமைப்பது குறித்து ரூ.2 கோடியில் திட்ட அறிக்கை என்று கூறினார்.

## விநாடி-வினா போட்டியுடன் வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்கள் உரையாடல் 2027 போட்டி தொடங்கியது

சென்னை 20, ஆகஸ்ட் 2026: வளர்ச்சியடைந்த இந்தியா விநாடி-வினா போட்டித் தொடக்கத்துடன் வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்கள் உரையாடல் 2027 தொடங்கியது. இதில் தேர்ந்தெடுக்கப்படும் இளையோர் புதுதில்லியில் பிரதமரைச் சந்தித்து தங்கள் எண்ணங்களை பகிர்ந்துக் கொள்ள வாய்ப்புப் பெறுவார்கள்.

அரசியல் பின்னணி இல்லாத ஒரு லட்சம் இளம் தலைவர்கள் உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையுடன் இத்திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்தத் திறமைமிக்க இளைஞர்களுக்கு பொது வாழ்வில் ஈடுபடவும், தங்கள் கருத்துகளை தெரிவிக்கவும், நாட்டைக் கட்டமைக்கும் பணியில் பங்கேற்கவும் இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது.

வெளிப்படையான, தகுதியின் அடிப்படையில் பல்வேறு நிலைகளைக் கொண்ட நடைமுறைகளின் மூலம் பங்கேற்பாளர்கள் டிஜிட்டல் விநாடி-வினா போட்டியிலிருந்து கட்டுரைப் போட்டி மாவட்ட அளவிலான போட்டிகள், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் அளவிலான போட்டிகளுக்குப் பின் தேசிய அளவிலான வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்கள் உரையாடல் போட்டியை அடைகின்றனர்.

இதில் முதல் நிலையிலான வளர்ச்சியடைந்த இந்தியா விநாடி-வினா போட்டி மை பாரத் இணையதளத்தில் 2026 ஆகஸ்ட் 17 முதல் செப்டம்பர் 30 வரை நடத்தப்படுகிறது. 15 வயது முதல் 29 வயதுடைய இந்திய இளைஞர்களுக்கான இந்த விநாடி-வினா போட்டி பல்வேறு மொழிகளில் டிஜிட்டல் முறைகளில் நடத்தப்படும். இப்போட்டியில் பங்கேற்றவர்களில் முதன்மையான 10 சதவீதம் பேர் அடுத்த நிலையிலான வளர்ச்சியடைந்த இந்தியா கட்டுரைப் போட்டிக்குத் தகுதி பெறுவார்கள்.

அவர்கள் மை பாரத் இணையதளம் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியா தொடர்பான தலைப்பில் 500 சொற்களுடன் கூடிய கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## இந்த ஆண்டு ரசிகர்களுக்காகத் தனது மிகப்பெரிய தென்னிந்தியத் திரைப்படத் தொகுப்பை நெட்ஃப்ளிக்ஸ் வழங்குகிறது.

சென்னை, 20 ஆகஸ்ட் 2026: தென்னிந்தியக் கதை சொல்லல் மீதான தனது ஈடுபாட்டை நெட்ஃப்ளிக்ஸ் மேலும் வலுப்படுத்துகிறது; இதன்படி, இந்த ஆண்டின் மீதமுள்ள காலப்பகுதியில் தமிழ், தெலுங்கு மற்றும் மலையாளத் திரைப்படத் துறைகளில் வாரத்திற்கு சராசரியாக ஒரு புதிய திரைப்படத்தை வெளியிடவுள்ளது. 2026-ஆம் ஆண்டின் முதல் பாதியில் பெற்ற சிறப்பான வெற்றியைத் தொடர்ந்து, பல்வேறு வகைகளிலும் உணர்வு நிலைகளிலும் அமைந்த கதைகள், புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் மக்கள் விரும்பும் நட்சத்திரங்களை ஒன்றிணைத்து, இத்துறையிலேயே மிகவும் பன்முகத் தன்மை கொண்ட மற்றும் சுவாரஸ்யமான திரைப்பட வரிசையை நாங்கள் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறோம். பொழுது போக்கு ரசிகர்களைப் பொறுத்தவரை, நெட்ஃப்ளிக்ஸில் எப்போதும் புதிதாகக் கண்டறியக் கூடிய ஒன்று காத்திருக்கிறது என்பதே இதன் பொருளாகும்.

பெரும் வெற்றிப் படங்கள் முதல் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்தும் கதைகள் வரை, 2026-ஆம் ஆண்டின் முதல் பாதியில் நெட்ஃப்ளிக்ஸின் இந்தியத் திரைப்பட வரிசை அனைத்திற்கும் இடமளித்தது. 'யூத்', 'வித் லவ்', 'பிளாஸ்ட்' மற்றும் 'பரதநாட்டியம் 2 : மோகினியாட்டம்' ஆகிய படங்கள் பார்வையாளர்களின் மனதை வெகுவாகக் கவர்ந்தன; இது, ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் பரவலாகச் சென்றடையக்கூடிய கதைகளை வழங்குவதில் எங்களுக்கிருக்கும் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. சமீபத்தில், 'மேட் இன் கொரியா' திரைப்படம், ஆங்கிலம் அல்லாத உலகளாவிய திரைப்படங்களுக்கான எங்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த முதல் தென்னிந்தியத் திரைப்படமாகத் திகழ்ந்தது. மேலும் இப்படம் பிரேசில், மெக்சிகோ, அர்ஜென்டினா, வெனிசுலா முதல் கொரியா, தைவான் மற்றும் தென்னாப்பிரிக்கா வரை 54 நாடுகளில் 'முதல் 10' இடங்களுக்குள் இடம் பெற்றது. உலகளாவிய அளவில் கிடைத்த இந்த வரவேற்பைத் தொடர்ந்து, அப்படத்தின் முன்னணி நடிகையான பிரியங்கா மோகன் 'கொரியா சுற்றுலாத் துறையின் கௌரவத் தூதராக' நியமிக்கப்பட்டார்.

கதைகள் தங்கள் பிறப்பிடத்தைத் தாண்டி வெகுதூரம் பயணித்து அர்த்தமுள்ள கலாச் சாரத் தொடர்புகளை உருவாக்கும் 'நெட்ஃப்ளிக்ஸ் தாக்கம்' (Netflix Effect) என்பதற்கு இது ஒரு சிறந்த சான்றாகும்.

பார்வையாளர்களுக்குப் புதிய கதைகளை வழங்கும் வரிசையில், ஆகஸ்ட் 21 அன்று வெளியாகவுள்ள 'பியார் பிரேமா கல்யாணம்' திரைப்படம், காதல், திருமணம் மற்றும் திருமணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை குறித்த கண்ணோட்டத்தையே மாற்றியமைக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த ஆண்டிற்கான எங்களின் பிற வெளியீட்டுத் திட்டங்களில், திரையரங்குகளில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள பல சுவாரஸ்யமான திரைப்படங்கள் இடம்பெற்றுள்ளன; இதில் சமீபத்தில் வெளியான ராம் சரணின் 'பெட்டி' மற்றும் விரைவில் வெளியாகவுள்ள தனுஷின் 'ஓம் சாப்டர் 1 : உதிரம்', விஜய் தேவரகொண்டாவின் 'ரணபாலி', நானியின் 'பாரடைஸ்' உள்ளிட்ட படங்கள் அடங்கும். நெட்ஃபிலிக்ஸின் தென்னிந்தியப் படைப்புகளின் பட்டியல் விரிவடைந்து வருவதால், உலகளாவிய ரீதியில் அனைவராலும் தொடர்பு படுத்திக் கொள்ளக் கூடிய, தனித்துவமான உள்ளூர்ச் சுவைகளைக் கொண்ட, கலாச்சார ரீதியாக உண்மையான கதைகளை இன்னும் ஆழமாக வழங்குவதில் இந்தத் தளம் கவனம் செலுத்துகிறது.

## அமேசான் எம்ஜிஎம் ஸ்டுடியோஸ் மற்றும் கலர் யெல்லோ இணைந்து வழங்கும் இந்தியாவின் ஃபேன்டஸி குடும்பத் திரைப்படமான, யாமி கௌதம் தர் நடிப்பில் உருவாகியுள்ள 'நய்யி நவெல்லி'!

சென்னை 20, ஆகஸ்ட் 2026: அமேசான் எம்ஜிஎம் ஸ்டுடியோஸ் மற்றும் கலர் யெல்லோ தயாரிப்பில், யாமி கௌதம் தர் நடிப்பில் உருவாகியுள்ள இந்தியாவின் ஃபேன்டஸி குடும்ப பொழுதுபோக்குத் திரைப்படமாக 'நய்யி நவெல்லி' உருவாகியுள்ளது. பண்டிகைக் காலத்தில் குடும்பத்தினர் அனைவரும் திரையரங்குகளில் பார்த்து மகிழும் திரைப்படமாக இது உருவாகியுள்ளது. பாலாஜி மோகன் இயக்கியுள்ள இப்படத்திற்கு ஹிமான்ஷு ஷர்மா மற்றும் திவ்ய நிதி ஷர்மா கதை, திரைக்கதை எழுதியுள்ளனர். ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். அசாதாரணமான சம்பவங்கள், குடும்பத்தில் வரும் குழப்பங்கள், எதிர்பாராத திருப்பங்கள் மற்றும் ஏராளமான நகைச்சுவை நிறைந்த உலகத்திற்குள் பார்வையாளர்களை இப்படம் அழைத்துச் செல்லும். 'நய்யி நவெல்லி' 2026 அக்டோபர் 16ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.




அமேசான் எம்ஜிஎம் ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் இந்திய எஸ்விஓடி ஒரிஜினல்ஸ் பிரிவின் இயக்குநரும் தலைவருமான நிகில் மாதோக் கூறுகையில், "'நய்யி நவெல்லி' திரைப்படம் நிச்சயமாக தசரா பண்டிகைக்கானது என்ற உணர்வு எங்கள் அனைவருக்கும் இருந்தது. இதைவிட சிறந்த வெளியீட்டுத் தேதி இருக்க முடியாது. யாமி கௌதம் தர் அற்புதமாக நடித்துள்ளார். படக்குழுவினரும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளனர். ஆனந்த் எல். ராய் மற்றும் ஹிமான்ஷு ஷர்மாவுடன் முதல் முறையாக இணைந்துள்ளோம். அமேசான் எம்ஜிஎம் ஸ்டுடியோஸ் மற்றும் கலர் யெல்லோ நிறுவனத்துடன் இணைந்து, இந்த தசராவுக்கு குடும்ப பார்வையாளர்களின் முதல் தேர்வாக 'நய்யி நவெல்லி' இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்" என்றார்.

அக்டோபர் 16, 2026 முதல் உங்களுக்கு அருகிலுள்ள திரையரங்கில் இந்த பிரம்மாண்டமான குடும்ப ஃபேன்டஸி உலகத்தை காணத் தயாராகுங்கள்!

## "அமரம்" திரைப்பட இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா !!



சென்னை 20, ஆகஸ்ட் 2026: திவ்ய சேத்ரா பிலிம்ஸ் பட நிறுவனம் சார்பில் நிர்மலா ராஜன் வழங்க சி.ஆர்.ராஜன் தயாரிப்பில், இயக்குனர் திரு அருள் கிருஷ்ணன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் "அமரன்".

மூன்று காலகட்டங்களில் மூன்று நிலப் பகுதிகளில் நடக்கும் ஒரு அமர காதல் கதையாக உருவாகியுள்ள இப்படத்தில், தேஜஸ் ராஜன் கதாநாயகனாக நடித்துள்ளார். கதாநாயகியாக ஐரா அகர்வால் நடித்துள்ளார். மற்றும் ஜார்ஜ், சாய் தீனா, நாகிநீடு, கல்கி ராஜன், ஹரிஷ் பெராடி, வாசுதேவன் முரளி ஆகியோர் நடித்துள்ளனர்.

கதை, திரைக்கதை, வசனம், எழுதி இயக்கியுள்ளார் திருஅருள் கிருஷ்ணன். இவர் இயக்குனர் கோகுல், ராஜன் மாதவ் ஆகியோரிடம் உதவியாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

வரும் ஆகஸ்ட் 28-ல் வெளியாகவுள்ள நிலையில் இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வினில் தயாரிப்பாளர் சி.ஆர். ராஜன் பேசியதாவது..,

'அமரம்' திரைப்படத்தை வாழ்த்த வந்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லோரும் ஒரு நல்ல படத்தை உருவாக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். ஆனால் அதற்கு கலைஞர்களின் உழைப்பும் அர்ப்பணிப்பும் அமைய வேண்டும். அது சில படங்களுக்கு மட்டுமே அமையும். அந்த வகையில், 'அமரம்' படத்திற்கு அத்தகைய சிறப்பான உழைப்பும் அர்ப்பணிப்பும் அமைந்துள்ளது.

படத்தின் இயக்குநர் அருள் கிருஷ்ணன் பேசியதாவது..,

"என்னுடைய திரைப்பயணம் என்பது மிக நீண்ட பயணம். நான் சினிமாவில் நீண்ட காலமாக இருந்து வருகிறேன். என்னுடைய ஊரிலிருந்து இதுவரை யாரும் சினிமாவிற்குள் வந்ததில்லை. எனது ஊருக்கு சினிமா என்பது புதிதான விஷயம். நான் கே.எஸ். ரவிக்குமார், ஷங்கர் சார் போன்றவர்களைப் பார்த்துதான் படத்துறைக்குள் வந்தேன். அவர்களைப் போல் படங்களை உருவாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

சிறப்பு விருந்தினர் மாமன்ற நடுவர் டாக்டர் வி. ராமராஜ் பேசியதாவது.., "மக்களுக்காக பேசும் மீடியா துறை நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'அமரம்' படக்குழுவினருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் நுட்ப குழு விபரம்

எழுத்து இயக்கம் - அருள் கிருஷ்ணன், இசை - மிக்கி ஜெ .மேயர், பாடல்கள் - சினேகன், சௌந்தரராஜன். கே, ஒளிப்பதிவு - பரத் குமார், எடிட்டிங் - ஆர். ற்ராமர், கலை இயக்கம் - ஜனார்த்தனன்இ ஸ்டண்ட் - மிராக்கிள் மைக்கேல்இ நடனம் - பூபதி, தயாரிப்பு மேற்பார்வை - ஏ.பி. ரவி, மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ், தயா ரிப்பு - சி.ஆர்.ராஜன்.

Traident Arts ரவீந்திரன் இந்த படத்தை இம் மாதம் 28 ஆம் தேதி தமிழகமெங்கும் வெளியிடுகிறார்.

## செம்போஸ்கி மோஷன் பிக்சர்ஸ், ஃபோர்ஸ் ஃபிலிம்ஸ் வழங்கும் 'டிஸ்கோ' - நவம்பர் 6-ல் உலகமெங்கும் ரிலீஸ்!

சென்னை 20, ஆகஸ்ட் 2026: 'அஞ்சக்கள்ளகோக்கன்' படத்தைத் தொடர்ந்து, இயக்குநர் உல்லாஸ் செம்பன் தனது அடுத்த பிரம்மாண்ட படைப்பான 'டிஸ்கோ' படத்தின் அதிகாரப்பூர்வ ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளார்.

'அங்கமாலி டைரீஸ்' வெற்றிக்குப் பிறகு, பிரபல நடிகர்-எழுத்தாளர் செம்பன் வினோத் ஜோஸ் மற்றும் ஆண்டனி வர்கீஸ் மீண்டும் இணையும் இப்படத்திற்கு செம்பன் வினோத் ஜோஸ் திரைக்கதை எழுதியுள்ளார்.

செம்போஸ்கி மோஷன் பிக்சர்ஸ் மற்றும் அகமது கோல்சினின் ஃபோர்ஸ் ஃபிலிம்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இப்படத்தை மிகப்பிரம்மாண்டமாக தயாரித்துள்ளன.

ஆண்டனி வர்கீஸுடன் இணைந்து தேவ் மோகன், லுக்மேன் அவ்ரான், அர்ஜுன் அசோகன், செம்பன் வினோத் ஜோஸ், சாகர் சூர்யா, விஷ்ணு உன்னி கிருஷ்ணன், ஃபெமினா ஜார்ஜ், கல்யாணி அணில், மீரா வாசுதேவன், காயத்ரி சுரேஷ், செந்தில் கிருஷ்ணா, மணிகண்டன் ஆச்சாரி, அப்பானி சரத், சினோஜ் வர்கீஸ் மற்றும் வினீத் தட்டில் ஆகிய முன்னணி நட்சத்திரங்கள் இப்படத்தில் நடித்துள்ளனர்.



தற்போது வெளியாகியுள்ள ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில், நடிகர்கள் அனைவரும் கருப்பு உடையில் கையில் துப்பாக்கிகளுடன் சர்வதேச ஹாலிவுட் ஆக்சன் த்ரில்லர் பாணியில் அல்ட்ரா-ஸ்டைலிஷ் தோற்றத்தில் காட்சிளிக்கின்றனர். டைட்டில் லோகோவில் இடம் பெற்றுள்ள துப்பாக்கி குறியீடு, இது ஒரு மிகச்சிறந்த ஹை-வோல்டேஜ் ஆக்ஷன் மற்றும் கன்-ஃபைட் என்டர்டெய்னராக இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

அல்ட்ரா-மாஸ் சர்வதேச ஸ்டைலில் உருவாகியுள்ள 'டிஸ்கோ' திரைப்படம் வருகிற நவம்பர் 6-ஆம் தேதி அன்று திரையரங்குகளில் உலகமெங்கும் வெளியாகவுள்ளது.

தொழில்நுட்பக் குழு:

இயக்கம்: உல்லாஸ் செம்பன், திரைக்கதை: செம்பன் வினோத் ஜோஸ், ஒளிப்பதிவு: ஆர்மோ, இசை: மணிகண்டன் அய்யப்பா, படத்தொகுப்பு: ரோஹித் வி.எஸ். வாரியத், கலை இயக்கம்: கோகுல் தாஸ், சண்டைப் பயிற்சி: கலை கிங்சன், ஆடை வடிவமைப்பு: மெல்வி ஜே, ஒப்பனை: ரோனெக்ஸ் சேவியர், விஎஃப்எக்ஸ் : ஐடென்ட் லேப்ஸ், விநியோகம்: ஐகான் சினிமாஸ்.

## “நல்ல கதைகளை தமிழ் சினிமா ரசிகர்கள் எப்போதும் வரவேற்பார்கள். ‘மொத ராத்திரி’ திரைப்படமும் நிச்சயம் அவர்களை மகிழ்விக்கும்”: தயாரிப்பாளர்கள் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர்!

சென்னை, 20 ஆகஸ்ட் 2026: தமிழ் சினிமாவில் ரசிகர்களின் ரசனை மாறியுள்ளது என்பதற்கு சான்றாக இந்த வருடம் வெளியான நல்ல கதைக்களங்களைக் கொண்ட பல திரைப்படங்கள் வெற்றி பெற்றுள்ளன. உதாரணமாக ‘தாய் கிழவி’, ‘பிளாஸ்ட்’, ‘யூத்’ உள்ளிட்ட படங்களை சொல்லலாம். பான் இந்திய அளவில் பிரம்மாண்டமான திரைப் படங்களையும், குடும்ப உறவுகள் மற்றும் உணர்வுகளை மையமாகக் கொண்ட கதைகளையும் தொடர்ந்து தயாரித்து வரும் மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம், ரசிகர்களின் மாறிவரும் ரசனைக்கு ஏற்ப ‘மொத ராத்திரி’ திரைப்படத்தை தயாரித்து வெளியிடுகிறது.

பெரும் பொருட் செலவில் உருவாகியுள்ள ரவி தேஜா நடிக்கும் ‘இருமுடி கட்டு’ திரைப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாகியுள்ள நிலையில், மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் மற்றொரு தமிழ் திரைப் படமான ‘மொத ராத்திரி’ நாளை (ஆகஸ்ட் 21) அன்று உலகம் முழுவதும் வெளியாகிறது. நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் தயாரித்துள்ள இப்படத்தின் மூலம் ராஜா கருப்பசாமி இயக்குநராக அறிமுகமாகிறார். ரிஷிகாந்த் மற்றும் அனிஷ்மா அனில்குமார் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

படத்தின் வெளியீடு குறித்து தயாரிப்பாளர்கள் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் பகிர்ந்து கொண்டதாவது, “தமிழ் ரசிகர்கள் நல்ல கதைகளை எப்போதுமே கொண்டாடுவார்கள். குறிப்பாக, இந்த வருடம் வெளியான ‘தாய் கிழவி’, ‘பிளாஸ்ட்’, ‘யூத்’ போன்ற நல்ல திரைப்படங்களுடன் ரசிகர்கள் தங்களை பொருத்தி கொண்ட



தால் வரவேற்பைப் பெற்றன. ஒரு தயாரிப்பு நிறுவனமாக, பிரம்மாண்டமான பான் இந்திய வெற்றிப் படங்கள் முதல் குடும்பம், உணர்வுகள் மற்றும் வலுவான கதையம்சம் கொண்ட திரைப்படங்கள் வரை பல்வேறு வகையான சினிமாவை வழங்குவதில் நாங்கள் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளோம். அந்த நம்பிக்கையிலிருந்து தான் ‘மொத ராத்திரி’ திரைப்படம் உருவாகியுள்ளது” என்றனர்.

புதிய களத்தையும் புது திறமையாளர்களையும் அறிமுகப்படுத்தும் தமிழ் சினிமாவின் மற்றொரு புதிய முயற்சி ‘மொத ராத்திரி’ திரைப்படம் என்கிறது மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம்.

அறிமுக இயக்குநர் ராஜா கருப்பசாமி இயக்கியிருக்கும் ‘மொத ராத்திரி’ திரைப் படம் ஆகஸ்ட் 21, 2026 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

## சினிமா விமர்சனம் – ‘மொத ராத்திரி’ – சிரிப்பும் காதலும் நிறைந்த கலகலப்பான குடும்பப் பொழுதுபோக்கு!

சென்னை 20, ஆகஸ்ட் 2026: ரிஷிகாந்த் - அனிஷ்மா அனில்குமார் ஜோடி கலக்கல் | அறிமுக இயக்குநர் ராஜா கருப்பசாமியின் நம்பிக்கைக் குரிய முயற்சி

தமிழ் சினிமாவில் தொடர்ந்து புதிய இயக்குநர்களும், புதுமையான கதைக் களங்களும் வருவது ஆரோக்கியமான மாற்றமாக பார்க்கப்படுகிறது. அந்த வரிசையில், முன்னணி தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் ராஜா கருப்பசாமி இயக்கியிருக்கும் ‘மொத ராத்திரி’ திரைப் படம் ரசிகர்களை சிரிக்க வைக்கும் ஒரு ஜாலியான காதல் - நகைச்சுவைப் படமாக அமைந்திருக்கிறது.

ராஜா கருப்பசாமி - நம்பிக்கை அளிக்கும் அறிமுகம்!

அறிமுக இயக்குநர் ராஜா கருப்பசாமி, தனது முதல் படத்திலேயே ரசிகர்களை எப்படிக் கவர வேண்டும் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு களமிறங்கியிருக்கிறார்.

கதையை மிகவும் எளிமையாகவும், அனைவரும் ரசிக்கும் வகையிலும் நகர்த்தியிருப்பது இயக்குநரின் முக்கிய பலம். மைத்ரி மூவி மேக்கர்ஸ் - தரமான தயாரிப்பு!

நவீன் யெர்னேனி மற்றும் ரவி சங்கர் யலமஞ்சிலி தயாரிப்பில் உருவாகியிருக்கும் இப்படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது.

தெலுங்கு மற்றும் தமிழ் திரையுலகில் முன்னணி தயாரிப்பு நிறுவனமாக விளங்கும் மைத்ரி மூவி மேக்கர்ஸ், ஒரு அறிமுக இயக்குநரின் கதைக்கு வாய்ப்பு கொடுத்திருப்பது




பாராட்டுக்குரியது.

மொத்தத்தில்...

‘மொத ராத்திரி’ என்பது பெரிய சிக்கலான கதையைச் சொல்ல முயற்சிக்காமல், காதல், நகைச்சுவை மற்றும் குடும்ப உறவுகளை மையமாக வைத்து ரசிகர்களை மகிழ்விக்கும் ஒரு இலகுவான பொழுதுபோக்கு திரைப்படம்.

தீர்ப்பு:

சிரிக்க வைக்கும் காதல் காமெடிஞ் ரசிக்க வைக்கும் கதாபாத்திரங்கள்ஞ் நம்பிக்கை அளிக்கும் அறிமுக இயக்குநர்ஞ் கவரும் ஹீரோ - ஹீரோயின் ஜோடிஞ் மொத்தத்தில் குடும்பத்துடன் ரசிக்கக்கூடிய கலகலப்பான பொழுதுபோக்கு திரைப்படம் - ‘மொத ராத்திரி’!

முக்கிய நடிகர்கள்

ரிஷிகாந்த், அனிஷ்மா அனில்குமார், ஏ. வெங்கடேஷ், சங்கீதா பாலன், பானுப்ரியா, பக்ஸ்

தொழில்நுட்பக் குழு

இயக்கம்: ராஜா கருப்பசாமி, தயாரிப்பாளர்கள்: நவீன் யெர்னேனி & ரவி சங்கர் யலமஞ்சிலி, இசை: பரத் சங்கர், ஒளிப் பதிவு: சுரேந்திரன் பரஞ் சோதி, ஸ்டண்ட் இயக்குநர்: தளபதி ராஜா, தயாரிப்பு நிறுவனம்: மைத்ரி மூவி மேக்கர்ஸ், மக்கள் தொடர்பு சுரேஷ் சந்திரா.

## “பார்வையாளர்கள் ஒவ்வொருவரின் மனதை நெகிழ வைக்கும் குடும்பம், உணர்வு மற்றும் மாற்றத்தின் கதைதான் ‘இருமுடி கட்டு’”: மைத்ரி மூவி மேக்கர்ஸ்!

சென்னை 20, ஆகஸ்ட் 2026: மாஸ் மகாராஜா ரவி தேஜா, இயக்குநர் சிவா நிர்வாணாவுடன் இணைந்து குடும்பம், நம்பிக்கை மற்றும் மனமாற்றத்தை மையமாகக் கொண்ட உணர்வுப்பூர்வமான கதையான ‘இருமுடி’ திரைப்படத்தில் நடித்துள்ளார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் சார்பில் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் தயாரிக்க, டி-சீரிஸ் பிலிம்ஸ் வழங்கும் ‘இருமுடி கட்டு’ திரைப் படம் உலகம் முழுவதும் நாளை (ஆகஸ்ட் 21, 2026) திரையரங்குகளில் வெளியாகிறது.

படத்தின் வெளியீடு குறித்து தயாரிப்பாளர்கள் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் பகிர்ந்து கொண்டதாவது, “‘இருமுடி கட்டு’ திரைப்படம் நாளை ரசிகர்களைச் சென்றடைவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சிவா நிர்வாணா எங்களிடம் இந்த உணர்வுப்பூர்வமான கதையை சொன்ன போதே உடனே எங்களுக்கு பிடித்துவிட்டது. தந்தை மற்றும் மகளுக்கு இடையேயான உறவை பார்வையாளர்கள் நிச்சயம் தங்களுடன் தொடர்பு படுத்திக் கொள்வார்கள். அதிலிருந்து விரியும் கதை, மிகப் பெரிய மற்றும் எதிர் பாராத ஒரு உலகிற்குள் பார்வையாளர்களை அழைத்துச் செல்லும். ரவிதேஜா சார் மிகவும் சிறப்பாக நடித்துள்ளார். இதுபோன்ற வித்தியாசமான உணர்வுப்பூர்வமான கதாபாத்திரத்தில் அவர் நடித்திருப்பதை பார்ப்பது மிகவும்



மகிழ்ச்சி.

சிவா நிர்வாணா உணர்வுப்பூர்வமான கதையை கொடுத்துள்ளார். பிரியா பவானி சங்கர், பேபி நக்ஷத்ரா மற்றும் ஒட்டுமொத்த நடிகர்களும் அர்ப்பணிப்புடன் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் குமாரின் இசையும் படத்திற்கு மிகப்பெரிய பலம். படத்தின் உருவாக்கத்தில் அர்ப்பணிப்புடனும் கடின உழைப்புடனும் பணியாற்றிய ஒட்டுமொத்த படக்குழுவினருக்கும் எங்களது மனமார்ந்த நன்றி. நாளை திரையரங்குகளில் ரசிகர்கள் இப்படத்தை நிச்சயம் கொண்டாடுவார்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்” என்றார்.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் சார்பில் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் தயாரித்து, டி-சீரிஸ் பிலிம்ஸ் வழங்கும் ‘இருமுடி கட்டு’ திரைப் படம், மாஸ் மகாராஜா ரவி தேஜா, பிரியா பவானி சங்கர் மற்றும் இயக்குநர் சிவா நிர்வாணா ஆகியோரின் கூட்டணியில் உருவாகியுள்ள இப்படம், ஆகஸ்ட் 21, 2026 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

## ஜேசன் சஞ்சயின் ‘சிக்மா’ திரைப்படம் அக்டோபர் 2ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது!

சென்னை 20, ஆகஸ்ட் 2026: லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் தயாரிப்பில் உருவாகியுள்ள ‘சிக்மா’திரைப்படத்தின் மூலம், ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகிறார். படத்தின் முதல் இரண்டு பாடல்களும் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

தமிழ் சினிமாவில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள திரைப் படங்களில் ‘சிக்மா’ முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. லைகா புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தின் சுபாஸ்கரன் தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படத்தின் மூலம், ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகிறார். படத்தில் இருந்து வெளியாகியுள்ள ‘சிக்மா ஸ்டைல்’ மற்றும் ‘அய்யய்யோ அம்மாடி’ ஆகிய இரண்டு பாடல்களின் மாறுபட்ட இசை ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று, படத்தின் மீதான எதிர்பார்ப்பையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், ரசிகர்களின் நீண்டகால காத்திருப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில், ‘சிக்மா’ திரைப் படம் அக்டோபர் 2ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

படத்தின் கதை என்ன என்பது வெளிப்படையாக சொல்லாவிடினும், டீசர் மற்றும் முதல் இரண்டு பாடல்கள் மூலம் வெளியாகியுள்ள காட்சிகள், ‘சிக்மா’ படத்தின் வண்ணமயமான மற்றும் பொழுதுபோக்கு நிறைந்த உலகத்தைப் பற்றிய அறிமுகத்தை ரசிகர்களுக்கு வழங்கியுள்ளன. ‘சிக்மா ஸ்டைல்’ பாடலின் எனர்ஜியும், மெலோடியான ‘அய்யய்யோ அம்மாடி’ பாடலும் படத்தின் மீதான ஆர்வத்தை மேலும் அதிகரித்துள்ளன. வித்தியாசமான கதைக்



களத்தையும், கண்கவர் காட்சியமைப்பையும் கொண்ட முழுமையான பொழுதுபோக்குத் திரைப்படமாக ‘சிக்மா’ உருவாகியிருப்பதற்கான எதிர்பார்ப்பை இந்த பாடல்கள் ஏற்படுத்தியுள்ளன.

படத்தின் உருவாக்கம் திட்டமிட்டபடி, நிர்ணயிக்கப்பட்ட காலக்கட்டத்திற்குள் நிறைவடைந்துள்ளதாக லைகா புரொடக்ஷன்ஸ் தெரிவித்துள்ளது. மேலும், படத்தின் இயக்குநராக அறிமுகமாகும் ஜேசன் சஞ்சயின் தொழில் அணுகுமுறை, தெளிவு மற்றும் ஒவ்வொரு பணியிலும் அவர் காட்டிய நுணுக்கமான செயல்பாடு ஆகியவற்றையும் தயாரிப்பு நிறுவனம் பாராட்டியுள்ளது. ‘சிக்மா’ திரைப் படத்திற்காக புதுமையான விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளையும் படக்குழு திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீடு குறித்த கூடுதல் அறிவிப்புகள் விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘சிக்மா’ திரைப்படம் அக்டோபர் 2ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.